ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1994/74 - 2016 නොවැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.11.24

*1994/74 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1933/13 ஆம் இலக்க, 2015.09.21 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி மூலம் எனது பொறுப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டிருந்த மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் விடயங்கள் மற்றும் பணிகளில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் 5 ஆம் உப உறுப்புரையின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள தத்துவங்களை அமுல்படுத்தி பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகளைச் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சருக்குப் பொறுப்பளிக்கின்றேன் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

கே. டி. எம். சந்திராணி பண்டார,
மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு,
செத்சிறிபாய 11 ஆம் கட்டம்,
6 ஆம் மாடி,
பத்தரமுல்லை,
2016, நவெம்பர் 23.

#### அட்டவணை

1. உடல் மற்றும் உள ரீதியில் ஆரோக்கியமிக்க பிள்ளையை உருவாக்கும் நோக்கத்துடன், முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், கண்காணிப்புச் செய்தல் மற்றும் மாகாண மட்டத்திலான குழுக்களுடன் ஒருங்கிணைப்பு, ஒன்றிணைப்பு மற்றும் பின்னாய்வு செய்தல்.

2. கர்ப்பிணித் தாய்மாருக்கு 20,000 ரூபா பெறுமதிமிக்க போசாக்குமிக்க உணவுகளைப் பெற்றுக் கொடுக்கும் விசேட நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதைக் கண்காணிப்புச் செய்தல்.

3. வயது 3- 5 இற்கு இடையிலான பிள்ளைகளுக்குப் பசும்பால் கிளாஸ் ஒன்றைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதைக் கண்காணிப்புச் செய்தல்.

12- 481



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.